# பூக்குழி - ஆதிக்கக் கதாபாத்திரங்களும் விளிம்புக் கதையாடலும்

# Pookkuzhi (Pyre)- Dominant Characters and Marginal Plotting

**ரா. அருணா**, முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 641018.

**R. Aruna,** Ph.D Scholor. Tamil Department, Government Arts Collage (Autonomous), Coimbatore - 641 018.

**DOI : 10.5281/zenodo.7879850**

**Absract**

In today's post-colonial context, despite the voices of rebellion against authority, identifying and breaking down the paradigms of authority remains a major challenge. In a society entangled in caste, religion, ethnicity and language fundamentalism, the act of boasting about being a slave has grown. Caste has evolved over time. It continues the tradition of always practicing the divisive maneuver. This traditional cultural base fosters a group mentality and constructs a politics of hatred towards marginalization. The dominant society operates with a strong focus on an ideology that is neutral. Human emotions have no place in this movement. Caste tradition divides the human body into a socially conforming body and a non-conformist body within the caste identity. This article explores through 'Pookkuzhi' innovation that the body is destroyed when it joins.

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய பின்காலனியச் சூழலில் அதிகாரத்திற்கு எதிரான கலகக் குரல்கள் எழுப்பப்பட்டு வந்தாலும் அதிகாரக் கருத்துருவ வடிவங்களை அடையாளங்கண்டு உடைப்பது பெரும் சவாலான ஒன்றாக உள்ளது. சாதி, மத, இன, மொழி அடிப்படைவாத சிக்கலுக்குள் சிக்குண்ட சமூகத்தில் அடிமை என்பதையே தற்பெருமையாய் பறைசாற்றிக்கொள்ளும் செயல்பாடு வளர்ந்துள்ளது. சாதி என்பது காலகட்டத்திற்கு ஏற்ப பரிணாமமடைந்துள்ளது. அது எப்பொழுதும் பிரித்தாளும் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்திக்கொண்டே இருக்கும் மரபாகத் தொடர்கிறது. இந்த மரபு பண்பாட்டுத் தளத்தில் குழு ஆதிக்க மனப்பான்மையை வளர்த்தெடுத்து விளிம்புநிலை மீது வெறுப்பு அரசியலைக் கட்டமைத்து வருகிறது. பருண்மையில்லாத ஒரு கருத்தியல் மீது ஆதிக்கச் சமூகம் அதிக கவனம் கொண்டு இயங்குகிறது. இந்த இயக்கத்தில் மனித உணர்வுகளுக்கு இடம் இல்லை. சாதிய மரபு மனித உடலை சாதிய அடையாளத்திற்குள் இருத்தி சமூகத்திற்கு ஒத்துப்போகும் உடல், ஒவ்வாத உடல் என்று பிரித்து வைத்துள்ளது. இது இணையும் நிலையில் ஒவ்வாத உடல் அழித்தொழிக்கப்படுகிறது என்பதை 'பூக்குழி' புதினம் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

**Keywords :** சாதி, பெண்கள், பொதுபுத்தி, கருத்துருவம், நிலவுடைமை, மரபு

**முன்னுரை**

சாதியச் சமூகம் குடும்ப அமைப்பில் தன் சாதி உறவைக் காட்டி திருமணத்தை முடிவு செய்து அதன்பிறகு அவரைக் காதலிக்கக் கட்டாயப்படுத்துகிறது. இதை மீறும் உடல்களை ஒடுக்குகிறது.

சாதியம் என்ற கருத்தாயுதத்தால் வீழ்த்தப்பட்ட உயிர்கள் எண்ணற்றவை. புழங்கும் சாதி என்ற அளவில் காதல் அங்கீகரிக்கப்படுகிறது. புழங்கா சாதி அடிப்படையில் அழித்தொழிக்கப்படுகிறது. அவ்வகையில் 'பூக்குழி' புதினம், புழங்கும் சாதி, புழங்கா சாதி இடையே நிகழ்ந்த உயிரின இயல்பான காதல் உணர்வை முன்வைத்து புனையப்பட்டுள்ளது. இக்காதல் உணர்வால் வஞ்சிக்கப்படும் வாழ்வியலை,

1. இயற்கை உணர்வும் சாதிய மனமும்
2. நிற அடையாளமும் சாதியத் தீட்டும்
3. சாதியப் பொதுபுத்தியும் வன்ம மனநிலையும்
4. சாதியத்தை விளைவிக்கும் நிலவுடைமை
5. ஆதிக்கக் கதாபாத்திரங்களும் விளிம்பு கதையாடலும்

என்ற பொருண்மைகளை முன்வைத்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**இயற்கை உணர்வும் சாதிய மனமும்**

1990களில் நிலவிய உலகமயச் சூழலில் இந்திய மரபு சாதியத்தை அதற்கொப்ப புணரமைத்துக்கொண்டது. முக்கியமாக, தமிழ்நாடு சாதியப் பெருமைகளை அதிகமாகப் பேசத் துவங்கியது. சாதிய அடையாளத்தை முன்வைத்து சாதியத்திற்கு ஆதரவான குரல்கள் பெருமளவு ஒலிக்கத் தொடங்கின. எதிரான குரல்கள் நகர்ப்புறத்திற்குள்ளேயே தேங்கிவிட்டன. கிராமங்கள் சாதியத்தின் ஆணிவேரை இறுகப் பற்றிக் கொண்டன. சாதியப் படிநிலைகளைப் பாதுகாக்க அதிகாரக் கருத்துருவங்கள் துணைநல்கின. இவ்வகையில் நகரம் முதலாளியச் சமூகமாகவும் கிராமம் நிலவுடைமைச் சமூகமாகவும் கட்டமைந்திருந்ததைக் காணமுடிகிறது.

பண்ணையடிமையிலிருந்து வெளியேறத் தொடங்கிய தாழ்த்தப்பட்ட சாதி மக்களை, ஆதிக்கச் சாதி கருத்துருவங்களின்வழி ஒருங்கிணைக்க முனைந்தது. விசுவாச மனநிலை கட்டுடைக்கப்படும் நிலை உருவானபோது சாதியக் கலவரங்களையும் வன்முறைகளையும் கொலைகளையும் நிகழ்த்தி தன் சாதிய அடையாளத்தை நிலைநிறுத்திக்கொள்ள எத்தனித்தது. இச்சூழலில் ஆண்ட பரம்பரை, நாடகக் காதல், சடங்கு பண்பாடு, குலதெய்வப் பெருமை போன்ற சொல்லாடல்கள் கருத்துருவங்களாக உற்பத்தி செய்யப்பட்டன.

காதல் குறித்து இலக்கியங்கள் கொண்டாடிய அளவிற்கு மக்களிடம் வரவேற்பு இல்லை குறிப்பாக ஆதிக்கச்சாதிகளிடம். காதலை ஏற்றுக்கொள்ளும் மனநிலை பெருகியிருந்தாலும் அது சொந்த சாதி, இணையான சாதி, பொருளாதாரம் சார்ந்ததாகக் கட்டமைந்திருந்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆதிக்கச்சாதியினரைக் காதலிப்பது ஏற்றுக்கொள்ளப்படாததாகவும் மீறினால் ஆணவக் கொலை செய்வதாகவும் நிலைகொண்டது.

குமரேசன், சரோஜா இருவரின் காதல் உணர்வை வெளிப்படுத்தும் இப்புதினத்தில் அக உணர்வைக் காட்டிலும் அவர்களுக்குப் புற உலகிலிருந்து வரும் பிரச்சனைகள் அவர்களின் உளவியலைச் சிதைவிற்குள்ளாக்குகிறது. இவர்களின் களவு வாழ்க்கையில் சந்தித்த மகிழ்ச்சி, கற்பு வாழ்க்கையில் முட்செடிகளாகின்றன. இறுகிய பாறையாகப் படர்கிறது.

இளம் வயதில் விதவையான சீராயி தனது மகனான குமரேசனை பல்வேறு இன்னல்களுக்கிடையில் வளர்த்தெடுக்கிறாள். கிராமத்தில் தலித் இளைஞர்களுடன் சேர்ந்து வேலை பார்ப்பதை விரும்பாத சீராயின் கண்டிப்பினால் நகரத்திற்குப் புலம்பெயரும் குமரேசன் சோடாக் கடை ஒன்றில் வேலைக்குச் சேர்கிறான். இக்காலகட்டத்தில் நகரத்தை நோக்கி வேலை நிமித்தமாகப் புலம்பெயர்வது இயல்பான ஒன்றாக மாறியது. அங்குப் பணிச் சூழலிலும் வாழும் இடத்திலும் சாதிய அடையாளமற்ற முகங்களைச் சந்திக்க நேர்கிறது.

வரிசை வீடுகளில் தங்கியிருக்கும் குமரேசன் அதே வரிசை வீட்டில் வசிக்கும் சரோஜாவைக் காதலிக்கிறான். தாயை இழந்து தந்தையாலும் சகோதரனாலும் வளர்க்கப்பட்ட பெண் சரோஜா. மறைந்திருந்து பார்த்த பார்வையில் தொடங்கி வானொலியில் ஒளிபரப்பப்படும் திரைப்பாடல்கள்வழி ஊடுருவி குறியீட்டு மொழியாடல்கள்மூலம் காதல் அவர்களின் உள்ளங்களை ஒன்றிணைக்கிறது. களவுக் காதலாக இருந்தது கற்புக் காதலாக மாறுகிறது. உடன்போக்கு வந்திருந்தாலும் உறவுகளைச் சமாளித்து வாழ்ந்து விடலாம் என்ற எண்ணத்தில் கிராமத்திற்கு சரோஜாவுடன் வருகிறான்.

**நிற அடையாளமும் சாதித் தீட்டும்**

மனிதரின் நிற வடிவத்தை வைத்து அவர்களின் குணநலன்களை அடையாளப்படுத்தும் போக்கு உலகம் முழுவதும் விரவிக் கிடக்கிறது. இந்திய சமூகத்தில் நிற அடையாளம் சாதியை மையப்படுத்தி அமைந்துள்ளது. வெள்ளை நிறம் உயர்ந்தது, தூய்மையானது. கறுப்பு இழிந்தது, அழுக்கானது என்ற பொதுபுத்தி சமூகத்தின் மனநிலையாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது சூழலியல் தன்மையில் கட்டமைக்கப்பட்டுள்ளதை,

**“வெள்ளை நிற ஆரியருக்கும் கறுப்பு நிற அனாரியருக்கும் இடையே காணப்பட்ட நிறவேறுபாடே சாதிமுறை தோன்றக் காரணம்” (2021, ப. 25)**

இவ்வாறு நக்கீரன் எடுத்துரைக்கிறார். மேலும், இது இந்திய ஒன்றியத்தின் புனைவுகளில் விரவிக் காணப்பட்டதை,

**வெள்ளை X கறுப்பு என்ற எதிர்வானது, புராணங்களில் தேவர்கள் X அசுரர்கள் என்று எதிரொலித்தன. அசுரர்களின் நிறம் கறுப்பு. தேவர்களின் நிறம் வெள்ளை” (2021, ப. 25)**

என்று எடுத்துரைக்கிறார். இது தமிழ் இலக்கியங்களில் பொது மனநிலையாகக் கட்டமைந்திருப்பதை,

**“கறுப்பு என்னும் நிற அடையாளம் தலித் மக்களுக்கு மட்டும் ஏற்றப்படுவது தமிழ் நாவல்களின் பொது அம்சமாக இருந்து வருகிறது” (2004, ப. 89)**

என்று பெருமாள் முருகன் குறிப்பிடுகிறார். ஆனால் இதற்கு மாறாக பெருமாள்முருகன், ‘பூக்குழி’ புதினத்தில் சரோஜாவை செந்நிறம் கொண்டவளாகப் படைத்துள்ளார். கிராமத்திற்கு வந்தவுடன் சரோஜா குறித்த ஊர்மக்கள் விசாரணையில் நிறம் குறித்த பேச்சுகள் தொடங்குகின்றன. இதுவும் ஆதிக்கச் சாதிக்குச் சாதகமான ஒன்றாகவே உள்ளது. அவளின் தோலழகை வைத்துதான் குமரேசனை மயக்கிவிட்டாள் என்று பேசப்படுகிறது. இதுவே ஆதிக்கச் சாதிப் பெண்கள் என்றால்

தாழ்த்தப்பட்ட சாதி இளைஞர்கள் ஜீன்ஸ் பேண்ட், கண்ணாடி, பைக்குடன் வந்து மயக்கி விடுகிறார்கள் என்று முன்வைக்கப்படுகிறது. இரண்டிலுமே தாழ்த்தப்பட்ட சாதியினரைக் குறைசொல்லி தனது சாதிய அடையாளத்தைத் தற்காத்துக்கொள்ள முனைகிறது ஆதிக்கசாதி.

குமரேசன் கறுப்புநிற உடலமைப்பைக் கொண்டவன். சரோஜாவின் நிறம் அங்குள்ளவர்களை ஆச்சரியப்படுத்துகிறது. அதேசமயம் அவளின் சாதி அடையாளத்தை அறிந்து கொள்ள நடக்கும் உரையாடல்களில் அவளின் நிறம் குறித்த பேச்சுகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. சரோஜா கிராமத்திற்கு வந்தவுடன் அனைவரும் அவளின் நிற அமைப்பைப் புகழ்ந்தாலும்,

“மூஞ்சியப் பாத்தாத் தெரியாதா மொசப் புடிக்கற நாயி. நம்ம எனத்து மூஞ்சியில்ல மாப்ள இது. காடு மேட்டுல பெரண்டு திரியற மூஞ்சி இப்படியா இருக்கும்? இது பாரு நெவுலோணத்தி உட்டு நவராத மூஞ்சி. வெய்யப்படாத மேனி. செரி நெசமேச் சொல்லு... எப்படியோ... பொழங்கற எனந்தானா?” (2018, ப. 18)

என்று அவளின் சாதி குறித்த தகவலறிக்கையைப் பெறுவதில் அக்கிராம மக்கள் முழுமூச்சுடன் இயங்குகின்றனர். மேலும்,

“போன எடத்துல எப்படியோ தொடுப்பாயிருச்சு. செரி, தப்பில்ல. தொடுப்ப அங்கயே உட்டுட்டு வந்தர வேண்டியது தான. அப்பப்பப் போயி நாலு நாளு ஒருவாரமின்னு டேராப் போட்டுட்டு வந்திருக்கலாமே. இங்கொண்ண நம்ப எனம் சனத்துல பாத்து நாலு பேருக்குக் கெவுருதியாகக் கலியாணம் பண்ணிருக்கலாமில்ல மாப்ள. நம்ப சனத்துல மட்டும் என்ன கொறஞ்சு போச்சு. இப்பிடிச் செவப்பில்லைன்னாலும் மாநெறமாத்தான பிள்ளைவ இருக்குது” (2018, ப. 29)

என்று குமரேசனிடம் முன்வைக்கப்படும் இக்கூற்று அவளை தன் சாதி அல்லாதவளாக குமரேசனின் உறவுகள் தீர்க்கமாக நம்புகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. இருப்பினும் அவள் புழங்கும் சாதியா, புழங்கா சாதியா என்பதுதான் பிரச்சனை. இதிலிருந்து நிற அடையாளத்தை வைத்துக்கொண்டு சாதியைக் கண்டறியும் அறிவார்ந்த சமூகமாகச் சாதியச் சமூகம் புணரமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

குமரேசனின் உறவுக்கார ஆண்கள் சரோஜாவின் நிறத்தை நுகர்ந்து விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றனர். புதினத்தின் இறுதியில் அவளைக் கொல்ல நினைக்கும் ஒரு கூட்டம் சரோஜாவைப் புணர்ந்து விடும் குறிக்கோளுடன் எரியூட்ட முனைகையில், “நோண்டி மயங்குன அந்தச் செந்தோலத் தொட்டுப் பாத்தரலாமின்னு நெனச்சன். இப்படி ஆயிப்போயிருச்சே’, ‘நம்ம கண்ணுக்கு மட்டும் படட்டும். தொட்டுப் பார்த்தரலாம்” (2018, ப. 150) என்று பேசுவதைப் புதினம் பதிவுசெய்கிறது. தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்களின் உடலைப் புணருவதில் ஆதிக்கச்சாதிக்குத் தீட்டு கிடையாது. இதிலிருந்து ஆதிக்கச் சாதி ஆண்களின் இச்சைக்கு சாதி மூடுதிறையாகப் பயன்படுகிறது என்பது புலப்படுகிறது.

“இது என்ன எனத்துப்பிள்ள” என்ற கேள்வி அப்பொட்டல்காடு முழுக்க எதிரொலித்துக் கொண்டே இருந்தது. குமரேசன், “எல்லாம் நம்ப எனந்தான்” (2018, ப. 30) என்று சமாளித்துக்

கொள்வதை வழக்கமாக்கிக் கொள்கிறான். சரோஜா இக்கேள்வியை எதிர்கொள்ளும்போதெல்லாம் தன்னை அந்நியமான ஓர் உயிரியாகக் கற்பனை செய்துகொள்கிறாள். காதலையும் மீறி சரோஜாவின் சாதிய அடையாளம் அவசியமான ஒன்றாக அங்கு கருதப்படுகிறது. அனைத்து கேள்விக்கும் பதிலுரைத்துவிடுவது அவர்களின் முடிவாக இருந்தாலும் அடையாளத்தை வெளிப்படுத்துவதில் சிக்கல் தொடர்கிறது.

**சாதியப் பொதுபுத்தியும் வன்ம மனநிலையும்**

கிராமப் பண்பாடு என்றால் இயற்கையையும், வயல் வெளிகளையும், வளர்ப்பு விலங்குகளின் மீதான பாசத்தையும் அடையாளப்படுத்தும் ஒன்றாக இலக்கியங்கள் முதல் ஊடகங்கள் வரை காட்சிப்படுத்தி வருகின்றன. அதேசமயம் கிராம மனிதர்கள், வியாபார நிமித்தமாக கிராமத்திற்குள் வரும் வியாபாரிகள் மீது நேசத்தை வெளிப்படுத்துபவர்களாகவும் விருந்தோம்பல் பண்பில் சிறந்தவர்களாகவும் வாழ்வதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளனர்.

வியாபாரத்தின் பொருட்டு கிராமத்தில் நுழைபவர்களைப் பதிவுசெய்யும் கொங்கு வட்டார புதினங்கள் அவர்களை அணுகும் கிராமத்துப் பெண்களை இரண்டு விதமாகக் காட்சிப்படுத்துகின்றன. விளிம்புநிலைச் சாதிப் பெண்கள் ஊருக்குள் வரும் வியாபாரிகளிடம்,

“சைக்கிள்களில் சேலை, ஜாக்கெட், துணியெனக் கொண்டு வந்து வியாபரம் செய்வோர், வட்டிக்குக் கடன் கொடுத்து அதை வசூலிக்க வருவோர். தங்களுக்கு கிடைக்கும் ஆதாயங்களைக் கருத்தில் கொண்டு இந்தப் பெண்களும் அவர்களின் இச்சைக்கு இணங்குவதுண்டு” (2000, ப.85)

இவ்வாறு நடந்து கொள்வதாக சூர்யகாந்தன் பதிவுசெய்கிறார். ஆனால் ஆதிக்கச் சாதி பெண்கள் வியாபாரிகளை எதிர்கொள்ளும் விதத்தை,

“முட்டைக்கார பாய் அன்றைக்கு இரவு குமரேசன் வீட்டில் தங்கினார். வாரம் இரண்டு முறை ஊர்ப்பக்கம் வருவார். வேலை முடியாத நாளில் பாறைக்கு வந்து தங்குவார். அதுவும் வளர்பிறை காலமாக இருந்தால் அவருக்கு உற்சாகம் பிறந்துவிடும். வெயில் காலத்தில் கொட்டகைக்குள் படுக்க மாட்டார்.” (2018, ப. 35)

என்று பெருமாள் முருகன் முட்டைக்கார பாய் கதாபாத்திரத்தைப் பதிவுசெய்து,

“பாயண்ணா... வேத்தூரு வேற மனுசனாட்டமே தெரியல. எங்கூரு ஆளாட்டமே இருக்கறீங்க” (2018, ப. 35)

என்று சீராயி கூற்றாக அடையாளப்படுத்துகிறார். விளிம்புநிலைச் சாதிப் பெண்கள் என்றால் சமூகம் வரையறுத்துள்ள ஒழுக்கமற்ற, பாலியல் உடல்களாகவும் ஆதிக்கச் சாதிப் பெண்கள் என்றால் ஒழுக்கமான புனித உடல்களாகவும் கட்டமைக்கும் போக்கு சாதியச் சமூகத்தில் புரையோடிக்கிடப்பதைக் காணமுடிகிறது. அதேசமயம் வியாபாரிகளிடம், விளிம்புநிலைச் சாதிப் பெண்கள் பாலியல் கண்ணோட்டத்துடன், பணம் பறிக்கும் ஆதாயத்துடன் நடந்து கொள்பவர்களாகவும் ஆதிக்கச் சாதிப் பெண்கள் சகோதர உறவுமுறை வைத்து அழைப்பதுடன் தன்னுடன் வீட்டிற்குள் தங்கவைத்தாலும் ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபடாதவர்களாகவும் பரிவு

உள்ளம் கொண்டவர்களாகவும் கட்டமைக்கின்ற போக்கு கொங்குவட்டாரப் புதினங்களில் வெளிப்படுகிறது.

ஆடு, மாடுகளிடம் காட்டும் அக்கறையும் அரவணைப்பும் பாசமும் தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்களிடம் காட்டுவதில் ஆதிக்கச் சாதி அக்கறை கொள்வதில்லை. அம்மக்களைச் சக மனிதர்களாகக் கருதிக்கொள்ளாத ஆதிக்கச் சாதியினர் விலங்குகளைப் போல் நடத்துகின்றனர். விலங்குகளை சக மனிதர்களைப் போல் நடத்துகின்றனர். உயிரினங்களின்மீது ஒப்புமைப்பட்ட அன்பைப் பரிமாறிக்கொள்ளாத சமூகமாக ஆதிக்கச் சாதி இயங்குவதைத் தனது குடியிறுப்பில் ஆடுகளை வளர்க்கும் சீராயி அதனுடன் உரையாடுவதும் அதனை தன் பிள்ளைகள் போன்று கவனித்து வருவதன் வழியும் அறியமுடிகிறது. ஆடுகள் பாறைகளின் மீது நடக்கும்போது “பாறையில் பதிஞ்சா பூம்பாதம் புண்ணுப் பட்டுரும். பாத்து நடங்காயா…” (2018, ப. 45) என்று கரிசனையுடன் பார்த்துக்கொள்ளும் சீராயி தனது மருமகளை எரியூட்டுகிறாள்.

இவ்வாறு சீராயி விலங்குகளிடம் அன்புள்ளத்தோடும் முட்டைக்கார பாயிடம் பரிவெண்ணத்தோடும் நடந்து கொள்கிற அளவிற்கு சிறிதளவும் கூட சரோஜாவிடம் நடந்து கொள்வதில்லை. அவளைத் தனது மருமகளாகக் கூட ஏற்றுக்கொள்ள மனம் இல்லாத வன்ம மனநிலை கொண்டவளாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளாள். சீராயின் கேள்விகளையும், பேச்சுக்களையும் கேட்கும்போதெல்லாம் சரோஜாவின் மனநிலை சிதைவிற்குள்ளாகிறது. களவு வாழ்க்கையில் அவள் கண்டடைந்த இன்பம் கற்பு வாழ்க்கையில் மாராயின் சாதியப் பற்றின்வழி சிதைவிற்குள்ளாக்குகிறது.

இது ஆதிக்கச் சாதி பெண்கள், தங்கள் சாதியின், ஆணாதிக்கத்தின் பெருமைகளை, மரபுகளை அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு சேர்த்து புழகாங்கிதம் கொள்ளும் மனநிலையாளர்களாக அடையாளப்பட்டிருப்பதை வெளிப்படுத்துகிறது.

**சாதியத்தை விளைவிக்கும் நிலவுடைமை**

சங்க இலக்கியத்தில் பேசப்படும் காதல் உணர்வுகள் இன்றைய சூழலில் அபாயகரமானதாக மாறியிருக்கிறது. ‘யாயும் ஞாயும் யாராகியரோ’ என்ற பாடல் இன்று சினிமாத்தனமானதாக மாறியிருக்கிறது. இப்பாடலின் பேசுபொருளை முன்வைக்கும்போது ‘மானம்’ என்ற சொல்லாடல் முன்னிறுத்தப்படுகிறது. அத்துடன் கொலைகளும் நிகழ்த்தப்படுகின்றன. புழங்கும் சாதி, புழங்கா சாதிப் பின்னணியைக் கொண்ட இருவர் நேசிக்கும்போது கண்டிக்கப்படுகின்றனர். மீறி திருமணம் செய்துகொண்டால் கொலை செய்யப்படுகின்றனர். இதனால் உயிரின இயல்புகளில் ஒன்றான காதல் உணர்வை வெளிப்படுத்துவதில் இந்தியச் சாதி சமூகம் பெரும் சிக்கலில் புதையுண்டுள்ளது. தான் நேசித்த ஒருவரிடம் தன் விருப்பத்தை வெளிப்படுத்த முடியாத சூழல், முடிந்தாலும் திருமணம் செய்து கொள்வதில் சிக்கல், திருமணம் செய்துகொண்டாலும் அதன்பிறகான அச்ச வாழ்க்கை என்பதாக சாதியச் சமூகத்தில் ஆதிக்க வர்க்கம் சமூக உளவியலைக் கட்டமைத்து வருகிறது.

ஆதிக்கச் சாதி, மானம் என்பதை ஆணவத்துடன் ஒப்புமைப்படுத்தி வாழ்கிறது. மரியாதையை இழத்தல் மானமிழத்தலாக அடையாளங்காண்கிறது. குறிப்பாக, விளிம்புநிலைச்

சாதியினர் கொடுக்கும் மரியாதையில் இழுக்கு வரும்போது மானப்பிரச்சனையாக வடிவங்கொள்கிறது. இவர்கள் விவசாயத்தைக் காட்டிலும் விவசாய நிலத்தை அதிகாரம் மிக்கதாகக் கருதுகின்றனர். மானத்திற்காகத் தனது பிள்ளைகளைக் கழுவறுக்கும் காட்டுமிராண்டிச் சமூகமாக அடையாளப்பட்டு வருகின்றனர். இவர்கள் பெண் குழந்தைகளை வளர்த்தெடுப்பது,

"ஆதிக்க சாதி ஆண்கள் தங்களின் இருப்பை சாதியாலேயே நிலை நிறுத்துகிறபோது, சாதி இந்து பெண்கள் அவரவர் சாதிக்கான ஒரு கவுரவச் சின்னமாகவே வளர்க்கப்படுகின்றனர். பெண்ணை வளர்ப்பதையோ, படிக்க வைப்பதையோ விட, அவர்களுடைய தகுதிக்கு உகந்த ஜாதிக்கார மாப்பிள்ளையை மணம் முடித்து வைப்பதுதான் ஆதிக்க சாதிக்கான கவுரவமாகக் கருதப்படுகிறது. காரணம், ஒரு சாதியின் வம்சாவளியைத் தழைக்கச் செய்யப் போகிறவள் பெண்தானே!" (2010. கீற்று)

என்று மீனா மயில் குறிப்பிடுவதுபோல சாதிய கவுரவத்தை முன்வைத்துதான். ஆதிக்கச் சாதி பெண்களும் ஆணாதிக்க வடிவங்களை எதிர்ப்பதை விடுத்து சாதியத்தின் வாயிலாக கிடைக்கும் சலுகைகளை அனுபவித்துக் கொண்டு கவுரவச் சின்னங்களாகத் தங்களை அடையாளப்படுத்தி வருகின்றனர்.

மேற்கூறிய சான்றாதாரத்திற்கு மறுதலையாக நடந்து கொண்ட குமரேசன் தன் சாதிப் பெண்ணை மணக்காமல் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்தவளைத் திருமணம் செய்து கொண்டது சீராயி என்ற ஆதிக்கச் சாதி பண்பாட்டு உயிரிக்கு அவமானகரமானதாக, கவுரவத்திற்கு இழிக்கு வந்ததாக நம்புகிறாள். தனக்கு எதிரான மகனின் ஒவ்வொரு செயலும் அவனுக்கான துணை வந்தபிறகுதான் நிகழ்வதாக சீராயி கற்பனை செய்துகொள்கிறாள்.

"அவ சொல்லிக் குடுத்துத் தெரிஞ்சிருப்ப. இல்லீனா என்னய இப்படி எதுக்குப் பேசுவியா? அப்படியா வளத்தன். அவளப் பாத்ததியும் பெத்த தாயி மாத்தாளாப் போயிட்டா." (2018, ப. 141)

என்று குமரேசனை வசைபாடுகிறாள். திருமணத்திற்கு முன்பு வரை அவன் செய்ததெல்லாம் குறும்பாகவும் அதன்பிறகு செய்வதெல்லாம் மனைவியின் தூண்டுதலாகவும் நினைத்துக்கொள்கிறாள். சரோஜா இதிலிருந்து விடுபட நகரத்தை நோக்கி நகர நினைக்கும்போது அவளின் கனவுகள் அனைத்தும் சிதைக்கப்படுகின்றன.

**ஆதிக்கக் கதாபாத்திரங்களும் விளிம்பு கதையாடலும்**

சாதிய ஒடுக்குமுறைகளை வெளிப்படுத்தும் படைப்புகள் பெரும்பாலும் விளிம்புநிலை மக்களின் வாழ்நிலையிலிருந்து அணுகப்படுவதில்லை. ஆதிக்கச்சாதியின் கண்ணோட்டத்தின் வழியேதான் சாதியச் சமூகத்தைப் பிரதிபலிக்கின்றனர். இப்புதினமும் ஆதிக்கச் சாதியின் கண்ணோட்டத்திலிருந்தே பயணப்பட்டுள்ளது.

சீராயி என்ற ஆதிக்கச்சாதி பெண் மையக் கதாபாத்திரமாகவும் சரோஜாவின் வாழ்வியல் விளிம்பு கதையாடலாகவும் இப்புதினத்தில் கட்டமைந்திருக்கிறது. ஆதிக்கச் சாதி ஊர் என்ற அடையாளத்திற்குள் கட்டுண்டு கிடக்கிறது. ஊரார் பேசிவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனம்கொள்கிறது. ஊராருக்காக தனது வாழ்வையும் தனது சந்ததி வாழ்வையும்கூட

சிதைத்துக்கொள்ள துணிகிறது. இப்புதினத்தில் வரும் சீராயி கதாபாத்திரம் கணவனை இழந்த தன்னை இந்த ஊர் எவ்விதத்திலும் தவறாகப் பேசிவிடக்கூடாது என்பதில் மிகுந்த கவனம் கொள்வதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதன் பின்னணியில் சாதிப் பற்று இயக்கம் கொள்கிறது. இப்புதினத்திலும் குமரேசன் தன் தாயிடம்,

“எனக்காவ அதச் செஞ்சன், இதச் செஞ்சன்னு சொல்றியேம்மா. உனக்கு நெசமே எம்மேல பாசதிருந்தா எஞ்சந்தோசத்துக்குக் குறுக்க நிப்பியாம்மா? ஊருக்காரன் ஆயரம் சொல்லட்டும். மாமனும் மயிரானும் கொடக்கறானுவ. சொல்லு, என்னயப் பிரியமாத்தான் வளத்தயா? உனக்கு ஒரு புடிமானம் வேணும்னு என்னய வளத்திருக்கற. எம்மேல உனக்குத் துளிகூடப் பாசமில்ல. இருந்தா இப்படி தெனந்தெனம் நெருப்ப அள்ளிக் கொட்டுவியா?” என்று கேட்கிறான். அதற்கு,

“ஆமாண்டா. உன்னோட எனக்கு ஊருத்தான் பெருசாப் போச்சு. நாலு பேரோட சேந்து வாழாத ஓரியா வாந்திருவியா?” (2018, ப. 141)

என்று பதிலுரைக்கிறாள் சீராயி. இதுதான் சாதிய வன்மத்தின் கோரமுகமாகும். தான் ஈன்றெடுத்த பிள்ளையைக் காட்டிலும் ஊர்மானம் முக்கியமானதாக கருதும்போக்கு சக மனிதர்களின்மீதான மனித நேயத்தைச் சிதைக்கிறது.

தனது கணவர் இடத்தில் தான் இருந்து இக்காரியத்தைச் செய்து முடிப்பதாக அவள் எண்ணி தனது மகன் சாதிய ஆணாதிக்க அடையாளத்தைச் சிதைப்பதற்குத் துணையாக இருந்த சரோஜாவை ஊராடோடு கூடி கழுவறுக்கிறாள். சரோஜாவின் வயிற்றில் கருவுற்றிருந்த குழந்தையும் எரிகிறது. இது சாதியத்தை உடைக்க சாதிமறுப்புத் திருமணம் அவசியமான ஒன்று என்ற விவாதம் கருவுறத் தொடங்கிய நிலையை ஆதிக்கச்சாதி அழித்தொழிப்பதாக குறியீட்டாக்கம் பெறுவதைக் காணமுடிகிறது.

வெயில் சுட்டெரிக்கும்போது பாறை எவ்வளவு சூடாகத் தகிக்குமோ அந்தளவு தகிப்பைப் பாறையின் அருகில் உள்ள குடிசையில் சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்ட சரோஜாவின் உள்ளம் அனுபவிப்பதை 'பூக்குழி' வெளிச்சப்படுத்துகிறது. இறுகிப்போன பாறையாக மாறிப்போயிருக்கிற ஆதிக்கச்சாதியின் உள்ளம் வெயிலில் சூடேறி சரோஜாவைச் சுட்டெரிக்கிறது.

குமரேசனின் குடிசையறுகில் இருக்கும் பாறை ஆதிக்கச் சாதி மனிதர்களின் மனப் படிமமாக மையம் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. அந்த பாறையை சரோஜா குமரேசனின் உடலாகவே கருதிக்கொள்கிறாள். குமரேசனைச் சுற்றி இறுகிப் பிடித்து வைத்திருக்கும் மண்ணை அவள் கவனிக்கவில்லை. அம்மண் அவளது காதலை மெல்ல மெல்ல அரிக்கத் தொடங்கியதை அவள் உணரவில்லை

காதல் சுட்டெரிக்கும் சாதி நெருப்பிற்குள் சிக்குண்ட பிறகு அது வெரும் சாம்பலையே உமிழ்கிறது. இந்தியச் சாதிச் சமூகத்திற்குள் சந்ததியை ஈன்றெடுத்து வளர்த்தல் என்பது திருமணம் என்ற அமைப்பை முன்னிறுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. தனது குழந்தைகள்மீது அன்பையும் நேசத்தையும் பொழிந்து அவர்களுக்குப் பல்வேறு உரிமைகளை வழங்கி இன்பம் காணும் பெற்றோர்கள் திருமணம் என்பதில் பிள்ளைகளின் தேர்வை மறுக்கின்றனர். அங்குதான்

அவர்களின் உண்மையான முகம் வெளிப்படுகிறது. இதில் சொந்த சாதி இல்லாமல் போனால் அவர்களின் குரூர முகம் வெளிப்படுகிறது.

தாயின் அன்பில் வளர்ந்த மகன் திருமணத்திற்குப் பிறகு அவளின் குரூர முகத்தைக் கண்டு திகைத்துப் போகிறான். அவளது கோபம் தீராத ஒன்றாக, வலிகளை ஏற்படுத்துவதாக மாறுகிறது. குடிசை வீடும், ஆடு மேய்க்கும் தொழிலும், கூழ் உணவும் என்று வாழ்ந்தாலும் சாதி என்பது அவளது உடலாகவும் உயிராகவும் பரிணமித்து நிற்கிறது.

உளவு வேலை பார்த்து சரோஜாவை சீராயின் உதவியோடு ஊரே கொல்லத் திட்டமிடுகிறது. இரவு நேரத்தில் மலம் கழிக்கப் புதருக்குள் ஒதுங்கிய அவளை ஊரே தேடுகிறது. முட்புதருக்குள் அக்கூட்டம் உள்ளே வரவர அவள் உள்ளே போய்க்கொண்டே இருக்கிறாள். முட்கள் குத்திக் கிழிக்கின்றன. அந்த வலியைக் காட்டிலும் அவளின் கனவு சிதையும் வலி மேலிடுகிறது. எந்த தெய்வமும் துணைக்கு வரவில்லை. அத்தெய்வங்கள் எல்லாம் ஆதிக்க சாதியின் தெய்வங்கள் அது எப்படி எனக்குத் துணையாக வரும் என்று அத்தெய்வங்களின்வழி வளர்ந்து நிற்கும் சாதியைக் கேள்விக்குட்படுத்துகிறாள். இன்றைய சூழலில் குலதெய்வ வழிபாட்டை முன்வைத்து அவர்களின் சாதியத்தை அறிந்து கொள்ளும் செயல்பாடு வளர்ந்திருக்கிறது. இது ஒரு சாதியக் கருத்துருவமாக வளர்ந்திருக்கிறது.

சரோஜாவை எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை என்றபோது மரம் அசைவதைக் கண்டு முள்காட்டுக்குத் தீ வைக்கின்றனர். நகரத்திற்குப் புலம் பெயர்ந்துவிடுவது என்று முடிவெடுக்கும் சூழலில் அனைத்துக் கனவுகளும் எரியூட்டப்படுகிறது. நகரத்தில் கடை பிடித்து சோடாக் கடை போடுவது என்று முடிவான பிறகு அதன் இறுதிக்கட்ட பணிகளை முடிந்தளவு இரவிற்குள் முடித்துவிட்டு திரும்புவதாகவும் வரவில்லையென்றால் கவனமாக இரு என்று குமரேசன் சொல்லி சென்ற அந்த இரவைப் பயன்படுத்தி சரோஜாவை கொலை செய்கின்றனர்.

**முடிவுரை**

ஆதிக்கச் சாதி உறவுகள், சாதியைக் காப்பாற்றும் நோக்கில் ஒன்றிணைந்து இயங்குவதைப் பல்வேறு படைப்பாக்கங்கள் வெளிப்படுத்தி வரும் சூழலில் 'பூக்குழி' புதினம், அன்பு என்பது சொந்த சாதிக்குள் காட்டிக்கொள்ளும் உணர்ச்சியாகவும், பிறர்மீது காட்டுவது பரிவாகவும் அரவணைப்பாகவும் அமைந்திப்பதை வெளிச்சப்படுத்துகிறது. சாதி மறுப்புத் திருமணம் செய்தவர்களை மனச்சிக்கலுக்கு உள்ளாக்கி அவர்களின் வாழ்வியலைச் சிதைக்கும் குரூர மனப்பான்மையைப் புதினம் மையப்படுத்துகிறது. சாதிய வேர்கள் கிராமப் புறங்களை இறுகப்பற்றி தனது கிளைவேர்களைப் பரப்பிக் கொண்டே இருப்பதை இக்கதைக்களம் பேசுபொருளாக்கியுள்ளது.

**துணைநின்ற நுல்கள்**

1. சூரியகாந்தன். (2000). விதைச்சோளம். (முதற் பதிப்பு). சென்னை, கவிதா பதிப்பகம்.
2. நக்கீரன். (2021). சூழலும் சாதியும். (முதற் பதிப்பு). திருவாரூர், காடோடி பதிப்பகம்.

3. பெருமாள் முருகன். (2004). அ – எதார்த்த நாவல்களில் ஒடுக்கப்பட்டோர் நிலையும் மேம்பாடும், (பக்.86-101). தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர் (தொகு. பூரணச் சந்திரன்). (முதற் பதிப்பு). தஞ்சாவூர், அகரம் வெளியீடு.
4. பெருமாள் முருகன். (2018). பூக்குழி. (ஐந்தாம் பதிப்பு). நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம்.
5. மீனா மயில். (2010). பெண்ணியத்தை வெல்லும் ஜாதியம். தலித் முரசு வெளியீடு. https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/10077-2014-12-15-07-18-38


**Referenes**


1. Suriyagandhan. (2000). Vidhaisolam. (Preliminary Edition). Kavita Publishing House, Chennai.
2. Nakiran. (2021). Environment and caste. (Preliminary Edition). Tiruvarur, Gadodi Publishing House.
3. Perumal Murugan. (2004). A – Status and Development of the Oppressed in Realist Novels, (pp.86-101). The Oppressed in Tamil Literature (Ed. Puranach Chandran). (Preliminary Edition). Thanjavur, Akram Publication.
4. Perumal Murugan. (2018). Pookkuzhi (Fifth Edition). Kalachuvadu Publishing House, Nagercoil.
5. Meena Mayil. (2010). A nation that conquers feminism. Publication of Dalit Murasu. https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/10077-2014-12-15-07-18- 38


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**அருணா. ரா “ பூக்குழி - ஆதிக்கக் கதாபாத்திரங்களும் விளிம்புக் கதையாடலும்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 2, ஏப்ரல் 2023, பக். 1-10

**Cite this Article in English**

**Aruna R “ Pookkuzhi (Pyre)- Dominant Characters and Marginal Plotting”** Pulam: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 2, April 2023, pp. 1-10